**மாவட்ட  உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,திருச்சுழி.**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா M.A.,B.Sc.,B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,திருச்சுழி.
2023 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ம் நாள் வெள்ளிக்கிழமை.
இடைநிலை மனு எண்.1/2021
இன்
அசல் வழக்கு 25/2021
***

1.செல்லம்
2.சேங்கை
3.லிங்கம்
4.செண்பகம் .... மனுதார்கள்/வாதிகள்

/எதிர்/

1.செண்பகத்தேவர் (இறந்துவிட்டார்)
2.அய்யனார்
3.நாராயணன்
4.முத்துராமலிங்கம்
5.பூவலிங்கம்
6.செண்பகபாண்டி
7.ராணி
8.லிங்கம் .... 1 முதல் 9 எதிர்மனுதார்கள்/
9.வேலு 1 முதல் 9 பிரதிவாதிகள்

10.P.N.பழனிவேல்ராஜன் .... 10 ம் எதிர்மனுதார்/சேர்க்கப்பட்ட வேண்டிய 10 ம் பிரதிவாதி

(இடை எண்.9/2022 மனுவில் கடந்த 31.10.2022 ம் தேதி ஏற்பட்ட உத்தரவின் படி மனு சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இம்மனு அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 25.04.2013—ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, IA.460/2013 ஆக கோப்புக் எடுக்கப்பட்டு, பின்பு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.சங்கரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இறந்து விட்ட நிலையிலும், 2, 4, 6

G ABARNA Digitally signed by G ABARNA

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் கே.சிவகுமாரன் அவர்கள் முன்னிலையாகியும், 3, 7, 8 to 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்ட நிலையிலும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்காக இருந்து வந்த வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்...

**உத்தரவு**

1. உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் ஆர்டர் 1 ரூல் 10(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுவில் கண்ட நபரை அசல் வழக்கில் 10ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி மனுதாக்கல்.

2. **சீர்திருத்தப்பட்ட மனுவின் சுருக்கம்**:–

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், மேற்படி நம்பர் வழக்கில் தாவா சொத்தை கிரையம், ஒத்தி, அடமானம் போன்ற எவ்விதமான வில்லங்களுக்கும் உட்படுத்தக் கூடாது என்று எதிர்மனுதார்கள் மீது I.A.No.639/2009 நிர் மனு தாக்கல் செய்து அதில் தாவாச் சொத்துக்களை பொறுத்து சமூகம் நீதிமன்றத்தில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியதில் கடந்த 01.12.2009ம் தேதி மனுதாரர்கள்/வாதிகள் கோரியவாறு தடை உத்தரவான Status Quo உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் தாவா சொத்தை சேர்க்கப்பட வேண்டி 10ம் எத்ர்மனுதார்/சேர்க்கப்பட வேண்டிய 10ம் பிரதிவாதி தாவாச் சொத்தில் அத்துமீறி நுழைந்த ஆக்கிரமிப்பு செய்ய முயன்றார். இது குறித்து தகவல் அறிந்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்து விசாரித்த போது தாவா சொத்தை, மனுதாரர்கள்/வாதிகள் கிரையம் பெற்றதாகவும், தாவா சொத்து தனக்கு பாத்தியம் என்றும் வீண் பிரஸ்தாபம் செய்து வருகிறார். மேற்படி விபரம் குறித்து மனுதாரர்கள்/வாதிகள் விசாரித்ததில் தாவா சொத்தின் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதியும், அவர் வாரிசுமான 10ம் எதிர்மனுதார்/சேர்க்கப்பட வேண்டிய 10ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து நீதிமன்ற உத்தரவை மீறி கிரையப் பத்திரம்

G ABARNA Digitally signed by G ABARNA

பதிந்துள்ளதாக தெரிய வந்தது. மேற்படி கிரைய ஆவண Sham & Nominal ஆக உருவாக்கப்பட்ட ஒரு போர்ஜரிபத்திரம் ஆகும். எனவே 10ம் எதிர்மனுதாரரை, அசல் வழக்கில் 10ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல்.

3.**2,4,6 எதிர்மனுதார்கள்/2,4,6 பிரதிவாதிகள் எதிருரையின் சுருக்கம்**:-

2,4,6 எதிர்மனுதாரர்கள்/2,4,6 பிரதிவாதிகள் தரப்பில், அசல் வழக்கில் சேர்க்கப்பட வேண்டிய 10ம் எதிர்மனுதார் எந்த தேதியில் ஆக்கிரமிப்பு செய்ய முயன்றார் என்ற விபரமும் அபிடவிட்டில் இல்லை. வழக்கிற்கு முன்பே 1ம் எதிர்மனுதார் தாவாச்சொத்தில் தென்புரம் 11 ஏக்கரை சேர்க்கப்பட வேண்டிய 10ம் பிரதிவாதிக்கே கிரையம் கொடுத்த விபரத்தை 2,4,6 எதிர்மனுதார்கள்/2,4,6 பிரதிவாதிகள் 09.11.2010ம் தேதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் மறுப்புரையில் கூறியுள்ளார்கள். அதைவிடுத்து ஏதோ தற்போது தான் இடைஞ்சல் செய்ய வந்ததுமாதிரி அபிடவிட்டில் கூறியிருப்பது ஆட்சேபிக்கப்படுகிறது. வழக்கு தாக்கல் செய்து 4 வருடங்கள் கழித்து மிகுந்த காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 6ம் எதிர்மனுதார் பெயர் செண்பகராஜா என்பது தவறு. செண்பகப்பாண்டி என்பதுதான் சரியான பெயர் என்று 2,4,6 எதிர்மனுதார்கள்/2,4,6 பிரதிவாதிகள் 09.11.2010ம் தேதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் மறுப்புரையில் கூறியுள்ளார்கள். எனவே இம்மனுவினை எதிர்மனுதாரர் தரப்பு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய தக்கது.

**தீர்வு காணவேண்டிய பிரச்சனை:**

4. இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**தீர்வு முடிவு:-**

5. இம்மனு, எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

5(1). அசல் வழக்கு எண்.25/2021 விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்திருக்கிறார்கள். தாவா

G ABARNA Digitally signed by G ABARNA

சொத்தில் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதி அவரது வாரிசான 10ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினருக்கு கிரையம் கொடுத்துள்ளதாம் பின்னிட்டு கிரையம் பெற்ற (Subsequent Purchaser) P.N.பழனிவேல் ராஜனை 10 வது பிரதிவாதியாக சேர்க்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

5(2). 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 1ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு முன்பே பழனிவேல்ராஜன் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றும் தாவா சொத்தினை சர்வே எண்.64/1A– யின் மொத்த விஸ்தீரமான 22 ஏக்கரில் தென்புரம் 11 ஏக்கரை கிரையம் பெற்ற பழனிவேல்ராஜன் அனுபவித்து வருகிறார் என்றும், இவ்வழக்கிற்கு மேற்படி பழனிவேல் ராஜன் அவசிய தரப்பினராக உள்ளார் என்றும் 2010 ஆம் ஆண்டில் 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் வலியுறுத்தியிருக்கிறார்கள் என்ற சங்கதியும் வழக்கு கோப்புகளை ஆய்வு செய்வதிலிருந்து தெரிய வருகிறது. வழக்கின் ஒட்டுமொத்த சங்கதிகளை கவனத்தில் நிறுத்தி பரிசீலிக்கும் போது பல்முனை வழக்குகளை தவிர்ப்பதற்காகவும் அசல் வழக்கில் அவசிய தரப்பினர்களை சேர்ப்பது அவசியம் என்பதாலும் இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமத்திகிறது. இருப்பிலும், அதிக காலம் கடந்து இம்மனுவை தாக்கல் செய்திருப்பதால் 2,3,4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட இன்னலை ஈடு செய்வதற்கு செலவுத்தொகையாக ரூ.1000/–, 30.08.2023ம் தேதிக்குள் மனுதாரர்கள்/வாதிகள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்கிறது. தவறினால் இம்மனு தள்ளுபடியாகிவிடும்.

<u>**இறுதிமுடிவு**</u>:–

இறுதியாக 2,3,4 எதிர்மனுதாரர்கள்/2,4,6 பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட இன்னலை ஈடு செய்வதற்கு செலவுத்தொகையாக ரூ.1000/–, 30.08.2023ம் தேதிக்குள் மனுதாரர்கள்/வாதிகள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன்

G ABARNA Digitally signed by G ABARNA

மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்கிறது. தவறினால் இம்மனு தள்ளுபடியாகிவிடும்.

அடுத்த வழக்கெடுப்பு நாள்:30.08.2023

*இந்த உத்தரவு என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.*

G ABARNA Digitally signed by G ABARNA

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.